1979 மார்ச் 20]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) பாதிக்கப்பட்ட தலைமை ஆசிரியர் செய்த மேல்முறையீட்டின் பேரில் இணை பள்ளிக் கல்வி இயக்குநர் அவரை மீண்டும் மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியராக நியமிக்க ஆணையிட்டார். அதன்படி அவர் அப்பள்ளியின் தலைமை ஆசிரியராகப் பணியேற்றுள்ளார்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக அங்கே இருக்கிற ஒரு அஸிஸ்டெண்ட் சுப்பிரமணியம் என்பவருக்குத்தான் சட்ட விரோதமாக பிரமோஷன் கொடுக்கப்பட்டது. இது சம்பந்தமாக பாதிக்கப்பட்ட ஆசிரியர் அப்பீல் ஒன்றை ஜாயிண்ட் டைரக்டர் இடத்தில் கொடுத்தார். ஜாயிண்ட் டைரக்டர் அந்த பிரமோஷனே இல்லீகல் என்று சொன்னார். அப்படி இருந்தும் அந்த அஸிஸ்டெண்ட் சர்டிபிகேட் கொடுக்கிறார். சம்பள பில்லில் கையெழுத்து இடுகிறார். இப்படி எல்லாமே இல்லீகலாகவே நடந்து கொண்டிருக்கிறது. எப்பொழுது இந்த பிரமோஷன் இல்லீகல் என்று ஜாயின்ட் டைரக்டரே சொல்லி விட்டாரோ நீங்கள் ஏன் அவரை இதற்கெல்லாம் அனுமதிக்கிறீர்கள். Why is it not stopped? What action has been taken against the administration?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்ட தலைமை ஆசிரியர் இணை பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அப்பள்ளி நிர்வாகத்தினரின் உத்தரவை எதிர்த்து முறையீடு செய்துள்ளார். அம்முறையீட்டின் மீது இணைப் பள்ளி கல்வி இயக்குநர் பரிசீலனை செய்து திரு. ஆர். சுவாமிநாதன் அவர்களை மீண்டும் நேஷனல் காலேஜ் மேல் நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியராக நியமனம் செய்யும்படி நேஷனல் காலேஜ் பள்ளிக் குழுவிற்கு தனது 1978-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 8-ம் நாளிட்ட நடவடிக்கையில் உத்தரவிட்டார். அவ்வாணையின்படி அத்தலைமையாசிரியர் திரு. ஆர். சுவாமிநாதன், நேஷனல் காலேஜ் மேல் நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியராக 1979-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 3-ம் நாளன்று பதவியேற்று பணி புரிந்து வருகிறார். இது எனக்குத் தரப்பட்டிருக்கிற தகவல்கள். வேறு ஏதாவது தவறுகள் நடந்திருந்தால் அது குறித்து விசாரித்து ஆலோசிக்கப்படும்.

Talakudi Panchayat.

* *Q.* No. 488—THIRU J. JAMES: Will the Hon'ble the Minister for Local Administraion be pleased to state:

(*a*) whether the Government has received any representation from the President, Talakudi Panchayat in Kanyakumari District regarding certain irregularities of the Executive Officer; and

(*b*) what is the action taken by the Government?

1979 மார்ச் 2)

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:—

(அ) புகார் மனு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

(ஆ) தக்க விசாரணையின் பின் சம்பந்தப்பட்ட நிர்வாக அதிகாரி மீது பத்மநாபபுரம் கோட்ட வளர்ச்சி அலுவலர் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

நெல்லை நகராட்சியின் கீழுள்ள கடைகள் குத்தகை.

*வினா எண் 489— திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நெல்லை நகர் மன்றத்திற்குச் சொந்தமான 'தந்தை பெரியார் பேருந்து நிலையத்திலுள்ள' கடைகள் கடைசியாக எப்போது ஏலத்திற்கு விடப்பட்டது?

(ஆ) அந்த கடைகளின் ஏலம் எப்போது காலாவதி ஆகும்?

(இ) காலாவதி ஆகும் கடைகளின் ஏலக் குத்தகை தொடர்ந்து நீட்டித்துத் தரப்பட்டுள்ளதா?

(ஈ) ஆம் எனில், எந்த அடிப்படையில் ஏலக் குத்தகை நீடிக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:—

(அ) 1976-ம் ண்டு மார்ச் திங்கள் 12-ம் நாள்.

(ஆ) 1977-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாளில்.

(இ) புதுப்பிக்கக் கோரியவர்களுக்குப் புதுப்பித்துத் தரப்பட்டது.

(ஈ) 1978-ம் ஆண்டு மே திங்கள் 5-ம் நாளில் இதுபற்றி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

விசைத்தறித் தொழிலாளர் குறைந்த பட்ச ஊதியம்.

*வினா எண் 490— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) விசைத்தறித் தொழிலாளர்களுக்கென அரசால் அறிவிக்கப்பட்ட குறைந்த பட்ச சம்பள உத்தரவு பல நிறுவனங்களில் அமுலாக்கப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதனை அமுலாக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது?